

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை நேற்று (29.12.2023) முகாம் அலுவலகத்தில், பேராசிரியர் அவர்களின் மகன் அ.அன்புச்செல்வன் சந்தித்து, மிக்ஜாம் புயல் பேரிடர் நிவாரணப் பணிகளுக்காக முதலமைச்சரின் பொது நிவாரண நிதிக்கு அளித்திட தன்னிடம் வழங்கப்பட்ட 15 இலட்சம் ரூபாய்க்கான காசோலைகளை வழங்கினார். உடன் பேராசிரியர் அவர்களின் பேரனும் சட்டமன்ற உறுப்பினருமான அ.வெற்றிஅழகன் உள்ளார்.



பொதுப்பணித்துறை நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் எ.வ.வேலு திருவண்ணாமலை மாவட்டம் புதுப்பாளையம் பேரூராட்சியில் கே.பி. திருமண மண்டபத்தில், மக்களுடன் முதல்வர் முகாமினை துவக்கி வைத்து, முகாம் நடைபெற்று வருவதை ஆய்வு செய்தார். இந்நிகழ்ச்சியில் மாவட்ட ஆட்சித் தலைவர் பா.முருகேஷ், திருவண்ணாமலை நாடாளுமன்ற உறுப்பினர் சி.என்.அண்ணாதுரை, சட்டமன்ற உறுப்பினர்கள் மு.பெ.கிரி (செங்கம்), பெ.சு.தி.சரவணன் (கலசப்பாக்கம்), மாநில தடகள சங்கத் துணைத் தலைவர் மரு. எ.வ.வே.கம்பன் மற்றும் உள்ளாட்சி பிரதிநிதிகள், அரசு அலுவலர்கள் உடனிருந்தனர்.





சாதனைகளின் அடுத்த கட்டமாக, Khelo India Youth Games 2023 ஜனவரி 19 முதல் 31 வரை தமிழ்நாட்டில் நடைபெறவுள்ளது. இந்த சிறப்புக்குரிய போட்டிக்கான ஏற்பாடுகள் சென்னை நேரு விளையாட்டு அரங்கில் நடைபெற்று வரும் நிலையில் அவற்றை இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் ஆய்வு செய்தார். புதிதாக அமைக்கப்பட்டுள்ள தடகள ஓடுதளம் (Athletic Track) மற்றும் பல்வேறு உள்கட்டமைப்பு வசதிகளை அதிகாரிகளுடன் நேரில் ஆய்வு செய்தார். நாடெங்கிலிருந்தும் 6 ஆயிரத்துக்கும் அதிகமான வீரர் – வீராங்கனையர் பங்கேற்கவுள்ள கேலோ இந்தியா யூத் கேம்ஸ் 2023, இந்திய விளையாட்டுத்துறை வரலாற்றில் தமிழ்நாட்டுக்கென தனி இடத்தை உருவாக்கவுள்ளதில் மகிழ்ச்சி என அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் தெரிவித்தார்.


